ஓலை 49 | ஓசை 166 | துலை [நவம்பர்] 2023

# அகர முதல
# இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை [ம] சிவம் அறக்கட்டளை

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால்,
ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது
வேறொன்றும் இல்லை.

**Translation:**

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

**Explanation:**

Amongst all attainable excellence
there is none equal to that of being free
from envy towards others.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# ஔவையாரின் நல்வழி

**துணைப் பொருண்மை : அடிப்பவர்க்கே கொடுப்பர்!**
**பா வகை : அம்மானை**

ஈந்திடா செல்வமதும் இன்பத்தை தாருமோ
காந்தமாய் ஈர்க்குதோ கண்மூடி - அம்மானை?
காந்தமாய் ஈர்ப்பினும் காப்பது யாதெனிலோ
மாந்தமும் தானிங்கே மண்ணிலே அம்மானை
சாந்தமும் கோர்த்திடும் சால்புதான் அம்மானை




கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயம்புத்தூர்

# கவிதை தூளிகள்

உறுப்புகளைத் தாண்டிய
ஆழ்மனத் தூய்மையை
சார்ந்தே
ஊனம் உணரப்படுகிறது

பயமின்மையின்
வெளிப்படைத் தன்மையே
கிரீடத்தின் நடுவில்
கல் பதிக்கிறது

சாயம் பூசா
நான் எனும்
உணர்வே
அடுத்த நகர்வுக்கு
அடி எடுத்து வைக்கிறது



மறு நொடியின்
மகத்துவத்தை
இழந்த நொடி
மட்டுமே
பறைசாற்றுகிறது.

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# உருகும் மெழுகாய்

ஓடையின் ஓரத்தில் இருக்கும் மரங்கள்
கோடையில் வருவோர்க்கு குளிர்நிழல் தந்தே
வாடைக் காற்றடிக்க இலைகளை உதிர்க்க
ஓடையிலே விழுந்து ஒய்யாரமாய் மிதந்து

செல்வதைப் பார்த்து கரையோர மக்கள்
உல்லாசமாய் நீரில் குதித்தே நீந்த
வெள்ளம் கரை புரள நீந்தியோர்
உள்ளம் குதூகலிக்க நீராடி களைக்க



கரையோரம் நின்ற மூதாட்டி கால் வழுக்கி
நுரைத்த நீரில் விழுந்திட நீந்தியவன்
நரைமுடி பிடித்திழுத்து கரைசேர்க்க
சாரையாய்த் திரண்ட மக்கள் அவனைப்

பாராட்டி புகழும் வேளையில் மூதாட்டி
சீராட்டி வளர்த்த மகள் ஓடியே வந்து
உருகும் மெழுகாய் எனக்காய்த் தேய்ந்தவளே
பருகிடு இன்னமுதென்று தேநீர் அளித்தே
இதமளித்து குளிரினைப் போக்கிடப்
பதமாய் அணைத்து பயத்தைப் போக்கினாள்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# கவிதைக்கு அழகு

கவிதையை
இறுக்கிப் பிடிக்காதே,
பந்தயக்
குதிரையைப்போல்
துரத்தி விரட்டாதே,
அதன் போக்கிலேயே
அதைப் பயணிக்கவிடு.

ஒருநாளும்
மாற்றுவழிப் பாதையில்
திருப்பி விடாதே,
கவிதைகளுக்கது உகந்ததல்ல.

மரத்தில் பழுக்கும்
கனிப்போல்,
கொடியில் மலரும்
பூப்போல்,
வானத்தில் ஒளிரும்
பிறைபோல்,



அதன்
இயல்பில் மென்மையாய்
அமைய வேண்டும்.
அதுதான்
கவிதைக்கு அழகும் கூட!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்


# குழந்தைத் தொழில்

கல்வி கற்க வேண்டிய வயதில்
காபி ஆற்றவும், பீடி சுருட்டவும்
பட்டாசு தொழிற்சாலையில்
வெடிமருந்து நிரப்பவும்!
வீட்டை விட்டு வெளியில்
தங்கி கடற்கரை முழுதும்
அலைந்து சுண்டல் விற்று
பாழாய் போகுது ஏழை
பிள்ளைகள் படிப்பு!
வசதி படைத்த குழந்தைகள்
தொலைக்காட்சிகளிலும்
திரையிலும் நாள் முழுதும்
நடித்து சம்பாதிக்க!
கஷ்டத்திற்கும் ஏழ்மைக்கும்
பணத்திற்கும் புகழுக்கும்
விலை போகின்றன
குழந்தைகளின் உழைப்பு!
குழந்தை தொழிலாளர்கள்
கூடாதென்ற அரசாங்க ஆணை
காற்றில் பறக்கிறது!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை.119

# நினைவலைகள்



ஆழியின் அதிர்வுகள்
அலையெனப் பாயும்
தூளியில் ஆடும் குழந்தையாய்
சந்தோஷம் அலைபாயும்
வெண்மேகங்களை யொப்ப
அலைகள் வந்து முகத்தோடு மோதும்

பட்டுத் தெறிக்கும் அலைகளாய்
பழைய நினைவுகள்
வந்து முகாரி பாடும்.
நீங்காத நினைவுகள் அலைமோத
விரல்கள் மணலில்
கோலங்கள் போடும்

ஆங்காங்கே கிளிஞ்சல்களும்
கரையொதுங்கும் கடற்பூக்களின்
சேகரங்களுமாய்
உயிரற்று மனம் மௌனிக்கும்
திடீரென அலைகள் வந்து
கண்ணீரை மெதுவாய்க்
கழுவிச் செல்லும்

இதமான கடற்காற்று
காதோரம் உரசி
ஆறுதல் சொல்லிப் போகும்.
அத்தனையும் மறந்து
மனம் உறுதி கொள்ளும்.

இலக்கை நோக்கிய பாதையில்
மீண்டும் பயணம்
தொடர்ந்திடத் தோன்றும்
அடிவானத்தில் சூரியன்
மெதுவாய் மிக மெதுவாய் இளைப்பாறும்
மேகங்களின் அழகிய வண்ணங்கள்
எனக்குள்ளும் கலக்கும்
வண்ணங்கள் கொண்டது தான்
நம் வாழ்க்கை

எதுவுமிங்கு நிலையானதன்று
காலம் இங்கு யாருக்கும் காத்திருப்பதில்லை
வாழும் கால் வருத்தங்கள் மறந்து
வாழ் என் யாரோ
எனை வாழ்த்துவதாய்த் தோன்றும்
பழையன மறந்து பயணங்கள்
இறக்கை கட்டிக்கொள்ளும்

கவிஞர் ஷெண்பகச் சோலையாள்,ஆய்ஷ்,இலங்கை

# ஓவியக் கண்காட்சி

மஞ்சளும் நீலமும் மாலை கோர்த்தது
மலர்ச்சிவப்பும் வெள்ளையும் மிகைத்து எழுந்தது

ஒன்றாகக் கலந்தவண்ணம் ஓடுது பாரீர்
ஓவியக் கண்காட்சியதில் இதயம்லயிக்குது காணீர்

கருக்கலில் வழுக்கிடும் சுடர்கள்
காற்றுடன் பேசிடும் பறவைகள்

மேகமும் வானமும் பூப்பெய்திட
மங்கலில் மங்கலம் பொங்கிடும்

மினுக்கிடும் அந்திநேரக்காட்சி
மானிடவிழிகள் அதற்கு சாட்சி

திங்களின் தீட்சையில் சர்வம்
திசைகளெங்கும் இன்பம் பரவும்



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# குழல் இனிது யாழ் இனிது கொண்டாடு

மழலை முகம் கண்டாலே மகிழ்வு
செய்யும் சேட்டைகள் ரசிக்க கூடியவை
குடும்ப உறவுகளின் கவலைகள் மழலை
முகம் கண்டாலே தீர்ந்து செல்லுமே
யாழ் இசையை கேட்ட வண்டுகள்
எல்லாம் ஆரவாரம் செய்து ஓரிடத்தில் கூடுமே
குழந்தைகள் ஓரிடத்தில் நின்று விளையாட
குடும்பமே குதூகலம் படுத்தி எந்நாளும்
திருவிழா போல காட்சி படுத்துமே
காசு பணத்தை விட குழந்தைகள் சிரிப்பொலியில்
எல்லாம் மறந்து விடலாமே குழந்தைகள்
இல்லா வீடு வெறும் பாலை வனமே
உறவுகளை மகிழ்ச்சியூட்டுவது
நாம் பெற்றெடுத்த குழந்தைகளே
சிறு வயதில் செய்யும் சேட்டைகள்
வளர்ந்தாலும் நினைவுக்கு வந்துச் செல்லுமே
அன்னை மடியில் குழந்தை தலை
வைத்து படுக்க பெற்றவளுக்கு எந்த
கவலையும் பஞ்சாப் பறந்து விடுமே
குழந்தைச் செல்வம் இருந்தால் வாழ்வு
எல்லா நாளும் சொர்க்கம் ஆகுமே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# அடைமழையில் நனைந்திடலாம்

அடைமழையில் நனைந்திடலாம்
அருவிதனை இரசித்திடலாம்
அழகிய விடியலை
அதிகாலை கண்டிடலாம்

ஆகாய கங்கைபில்
ஆத்மார்த்தமாக குளித்திடலாம்
ஆதவனின் கதிர்கள்
ஆன்மாவில் படர்ந்திடலாம்.

தடைகளில்லா ஓட்டங்களில்
தசைகள் தாண்டிடலாம்
தங்கு தடையின்றி
தண்மையை தேடிடலாம்.

மேகக் கூட்டங்களிடையே
மேன்மையாகப் பறந்திடலாம்
மேலாண்மை பராமரிப்போடே
வேளாண்மை செய்திடலாம்.

அருவியில் மேலேறி
அருமையாக குதிக்கலாம்
அன்னப் பறவையாக
அருஞ்சுவை பிரிக்கலாம்.

சாரலின் மென்மையை
சாளரத்திலே உணரலாம்
சாகசங்களை செய்தே
சாதனையாளர்கள் ஆகலாம்.

மெல்லிய பூங்கொடியில்
மென்மையான பூக்களை
மேன்மையாய் உருவாக்கலாம்
மேதினியில் மோகனமாகலாம்.

அந்தி வானம்
அந்தரத்தில் சிவக்கலாம்
அருங்காட்சிகள் பல
அருமையாக ருசிக்கலாம்.

ஆதவனின் உக்கிர
ஆளுகையின் வேளையில்
ஆக்கப்பூர்வமான தண்ணீர்
ஆதர்சமான பந்தல்கள்

ஆலயங்களில் கொணரலாம்
ஆண்டவனாய் உணரலாம்.
ஆண்டவர்கள் கண்முன்னே
ஆதர்ச மன்னர்களாகலாம்

பூமிப்பந்தின் கரையில்
பூரிப்பாய் சுற்றலாம்
பூக்களின் அழகியலின்
பூபாளம் பாடலாம்.

மின்னலின் பின்னலென
மினுமினுத்தே சொலிக்கலாம்
தடையில்லா இயற்கையின்பம்
தரணியிலே பெற்றிடலாம்.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# எளியாரை வலியார் அடித்தால்

**எளியாரை வலியார் அடித்தால்**
**வலியாரை தெய்வம் அடிக்கும்**

இருப்பவன் இல்லாதவனை
இளக்காரமாகப் பார்க்கிறான்
அதிகாரத்தைப் பயன்படுத்தி
எள்ளி நகையாடுகிறான்
உள்ளம் உருக்குலையும்
வார்த்தைகளால் வைகிறான்
ஆணவத்தால் அனைத்தையும்
அடக்கி ஆள்கிறான்
வாழும் வாழ்க்கை
நிலையானதென நம்புகிறான்
வறுமையில் உழல்வோரை
வஞ்சித்தே கொல்லுகிறான்
உணவையும் பொருளையும்
பதுக்கி வைக்கிறான்
உற்றார் உறவினரையும்
ஒதுக்கி மகிழ்கிறான்
உள்ளத்தில் அமைதி
உருக்குலைந்து தவிக்கிறான்
உண்மை அன்பை
உணர்ந்திட மறுக்கிறான்
நாளைய பொழுதில்
நம்பிக்கை இழக்கிறான்
பணத்தால் பதவியால் அளந்திட நினைக்கிறான்
எளியாரை வீழ்த்தும் வலியோரே கேளீர்
தெய்வ நிந்தனைக்கு ஆளாவீர் நீவீர்



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை (இலங்கை)

# கருகும் தளிர்கள்

கருகுதே தளிர்கள்
கருவறையிலும் குப்பைத் தொட்டியிலும்
பருவத்துக் கோளாறு
பசியினை மூட்ட

காமத்தீயில் விழுந்த
கபடமனங்கள் இரண்டு
உருவாக்கும் உயிரும்
உருகும் மெழுகாய்

தெருவிலே வீசி
காணாது செல்லும்
பிஞ்சும் என்ன பாவம் செய்ததோ
நாதியில்லா நரகத்தில்
நடை பிணமாக



உணவு உடையின்றி
அலையும் அவலம்
தாய் தந்தையின்றி
அனாதைகளாய்
வேகுதே நெஞ்சம்
வேதனையும் பார்த்திட
மனிதம் இல்லா
மாசுள்ள மனிதர்களால் இன்நிலை

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# தண்ணீர்

தண்ணீரே உயிர்காக்கும் கவசமாக
தலைக்கவசமும் அணிந்து
தனது உயிரையும் மறந்திட்டே
தப்பிக்க வைத்திடுவரே!

தாயன்போடு தாவி ஓடிவந்தே
தாருமாறாக பரவுவதை
தாக்கத்தையும் தாண்டி
தான்நிலைமறந்திடுவரே!



தினம்தினம் விபத்துகளிலும்
திடீர் ஆபத்துக்களயுமே
திகிலான நேரங்களில்
திரும்ப உயிரை காத்திடுவாரே!

தீயணைத்திடவும்
தீதென்று நினைத்திடாமல்
தீப்பிழம்பிலும் திணறாமல்
தீயாயிரங்கிடுவரே!

துயரென்றாலே துன்பமென்னாமலே
துச்சமாக தன்னுயிரை கொடுத்திட்டு
துயிலையும் துரத்திட்டு
துர்மரணத்தையும் தடுத்திடுவரே!

தூரத்தையுமெண்ணாமலே
தூசிஅழுக்கு பாராமலே
தூரிகை போல தீயிலும்.
தூவானமாய் நீருமிறைத்திடுவரே!

தெரிந்தும் தெரியாதவரானாலும்
தெவிட்டா பணியாக செவ்வனே
தெகிடியாய் பரவிடும் தீயையும்
தென்றல்புயலாய் அணைத்திடுவரே!

தைத்தலாக சூழ்ந்து
தைரியமாக நுழைந்தே
தைவதமாக காத்திடுவரே!

தொலைவிலிருந்து பிடித்தாலுமே
தொகையறிந்து அணைத்திட்டு
தொடர்ந்திடும் நெருப்பையும்
தொண்டனாய் நிறுத்திடுவரே!

தோடகம் வந்திடும் காயத்தையும்
தோணிக்கும் தோழனாக வைத்து
தோயாமலே காய்ந்திட்டு
தோரணமாய் உடலையும் தூக்கிவருவரே!

கவிஞர் நீலாசுபாஷ்,ஆக்கூர்

# சிலப்பதிகாரம் (பத்தேனு)

(அடைக்கல காதை — தொடர்கிறது)

8. கவுந்தியடிகள் மாதரியிடம் கண்ணகியின் சிறப்பு உரைத்தல்:

மங்கல மாது கண்ணகியை தினம் புனித நீரில் நீராடச்செய்
அங்கயற்கண்களுக்கு மை தீட்டி, கூந்தலுக்கு மலர் சூடுவாய்
தங்கமான இவளுக்கு தூய ஆடையை அணியச் செய்வாயாக
தங்கையான இவளை நற்றாயாக, நல்ல தோழியாகவும் கருது

இப்பாவை மனையைவிட்டு வெளியிடங்கள் சென்று அறியாதவள்
தப்பெதுவும் செய்யாத பத்தினிப் பெண்ணாக வாழ்ந்தவள் இவள்
வெப்பத்தின் துன்பத்தால் நடந்து நடந்து களைப்பாக இருக்கிறாள்
எப்பொழுதும் இவள் வாழுமிடம் மழைவளம் நிலவளம் குறையாது

தவச்சீலர்கள் தரும் அடைக்கலப்பொருள் காத்தல் புண்ணியமாகும்
தவமேவும் துறவி தருவது நாட்டையும் வீட்டையும் சிறக்கச் செய்வது
பவளமணிகள் போல் எக்காலத்திலும் மாற்று குறையா பலன் தரும்
தேவலோகத்தினரால் பாராட்டப் பெற்ற இவளை மகிழ்விப்பாயாக




9. மாதரி இருவரையும் தன் மனைக்கு இட்டுச் செல்லுதல்:

பசுக்கூட்டங்கள் கன்றுகளுக்கு பாலூட்ட வீடு திரும்பும் நேரம்
சிசுவான ஆட்டுக்குட்டியை தோளில் சுமக்கும் ஆயர்கள்
விசுவாசமான தம்குலப் பெண்களுடன் வீடு திரும்பினார்கள்
திசைக்கல்லைக் கடந்து அவர்கள் மாதரி வீடு வந்தார்கள்
( திசைக்கல் : எல்லை )

16. கொலைக்களக் காதை .

1. மாதரியின் பேரன்பு :

உடன் வந்த கண்ணகியை தனி பந்தர் கட்டி தங்க வைக்கிறாள்
மடக்கிளியான அவளை ஆயர் பெண்களுடன் நீராடச் செய்கிறாள்.
தடங்கல் இல்லாமல் சேவைக்கு மகள் ஐயை இருக்கச் செய்தாள்
சுடச்சுட தன் கணவனுக்கு பரிமாற தானே சமையல் செய்தாள்.

2. கோவலனை உணவு உண்ண அழைத்தாள்:

கண்ணகி காய்கறிகள் அரிய கண்கள் சிவந்து முகம் வியர்த்தாள் .
கண்ணான கணவனுக்கு பக்குவமாக ருசியோடு சமைத்து முடித்தாள்
உண்ணுவதற்கு முன் அவன் பாதம் தொட்டு கழுவி அமரச்செய்தாள்
எண்ணமுடியுமா அவள் கை சமையல் சோறு இதுவே கடைசி என்று

3. உண்ணும் முன் நிவேதனம் செய்தல் :

உணவு அருந்தும் முன் பூசைசெய்து இறைவனுக்கு அர்ப்பணித்தான்
மணவாட்டி, கணவன் இருவரின் செல்வச் சிறப்பை உணர்ந்தார்கள்
கண்ணபிரானும் நப்பின்னையும் மீண்டும் தம்இல்லம் வந்துள்ளனர்
வண்ணமுதம் படைத்து கண்ணாக காத்தருள விரும்பினாள் மாதரி

4. கோவலன் வருந்தி உரைத்தல் :

வெற்றிலைச் சுருளும், பாக்கும் உண்டபின் மடித்துக் கொடுத்தாள்
"பற்றேதும் இல்லாமல் உன்னை தனி மரமாக விட்டுச் சென்றேன்
இற்றுப்போன பின் உன்னை நாடி வந்திருக்கும் மகாபாவி நான்
சற்றும் மனம் தளராது வா என்றதும் உன் பாதம்நோக வந்தாய்
உற்று நோக்கின் நீ எனக்கு கிடைத்தது என் பாக்கியமே ஆகும்
கற்றுக் கொள்கிறேன் புதிய பாடம் காலம் கடந்து உன் பெருமை
விற்று வர கொடு உன் சிலம்பு ஒன்றை வியாபார நிமித்தமாக
மற்றேதும் பேசாமல் தந்து அனுப்பினாள் கணவனை மதுரைக்கு.

...தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# இவள் எதிர்கால நட்சத்திரம்



காயங்களால் வரண்டு போன
நெஞ்சினில் கனவுகளால்
தூவப்பட்ட விதைகள்
எங்கனம் முளைத்தெழும்?

வலிகளால் விழிதனில்
பிறப்பெடுத்த துளிகளை கொண்டா
முளைத்தெழும்? இல்லை.
வலியென்ற உளியால் மனக்கருங்கல்லினை
துளைத்துத்தெடுத்து பெற்ற
குருதிநீர் ஊற்றை கொண்டா?

காலம் செய்கின்ற கோலத்தால்
கண் கண்ட கனவும்
கைசேரவே இதயத்தை விட
அதிகமாய் துடித்திட.

வறுமையின் ஆட்சியும்
மேன்மையின் நீட்சியும் (தாமதம்)
வாழ்வின் இன்பங்களை
நிதம் புரட்டிப்போட.

இலட்சிய வெறியதுவும்
இதயத்தின் இரத்தத்தை - கொதிக்க செய்து
இருதய காற்றிலும் நிதம் எரியும்
எரிதணலாய் தன் ஈடேற்ற
மேனியை குளிர் காயச்செய்தே!

எண்ணங்களில் வேகமேற்றி
மூளையும் போர்முரசூத
விழிகள் உறங்க மறுத்திட்டே
விரல்களும் எழுதுகோலென்ற
கத்திப் பிடித்து

காகிதமெனும் ரதமேறி
எதிர்காலம் பயிலவென்றே
தனக்கானதோர் சரித்திரம்
படைத்திட நிதம்
தனியொருத்தியாய் களம் காணும்
இவள் எதிர்கால நட்சத்திரம்!

கவிஞர் க.ஹஸ்னி,இலங்கை

# அம்மா

ஆறு திங்கள் பாதுகாத்து
அழகாக பெற்றெடுத்து
கருவில் எட்டி உதைத்ததெல்லாம் மறந்துவிட்டு
என்னால் தன்னைத்தானே மறந்து உறக்கம் கெட்டு
எனக்கு பசியாற்றி தன் பசியையே
மறந்து விட்டு ஊருகண்ணு படும்னு
கண்ணுக்கு மையிட்டு
பொன்நகை எல்லாம் வாங்கி போட்டு
நான் பெரியவள் ஆனதும் அதட்டி வளக்காம,
அன்பா வளர்த்து ஆசைதீர அணைத்து முத்தமிட்டு
தப்பு பண்ணா தண்டிக்காம தாழ்மையா சொல்லிதந்து
பள்ளிக்கூடம் தாய் அனுப்ப
நானும் தந்திரமா படித்து வளர
திருமணம் என்ற ஒன்று என் வாழ்வில்
திருவிழா போல் வந்து நிக்க
பொறந்த வீடு பெருமையும்,
புகுந்த வீடு பொறுப்பையும் ஏற்று
குடும்ப பொறுப்பில் வந்த பின்னும்
என் தாய்க்கு நான் குழந்தையே
என்றும் என்றென்றும்
மறுஜென்மம் நீ பிறந்து விடு அம்மா
என் மகளாக கண்ணீரை காட்டாமல்
தன்னம்பிக்கையோடு எங்கள் இருவரையும் காத்த உன்னை
நாங்களும் காப்போம் எங்கள் பிள்ளையாக
என் செல்ல அம்மாவிற்கு
நான் எழுதும் ஓர் கவிதை.



கவிஞர் ப.ஜெகதீஸ்வரி,ஒ.தண்டரை

# ஸ்கூட்டி

என் வாகனம் சடப்பொருளல்ல
வாழ்க்கையுனூடே
என்னோடு பயணிக்கும் உறவுது.

மேகங்கள் நகர்வதைப்போல
என் வாகனத்திலே பயணிப்பதெனக்கு
அலாதி தான்.

மௌன மொழியிலே
மனம் திறக்கும் மென்முறுவலுடன்
மெதுவாக அழைத்துச் செல்லும்.

வேகமாக நான் சென்றாலும்
வேண்டாமென்று அறிவுறுத்தும் இதம்.
பெரு மகிழ்வுடன்
எனையழைத்துச் செல்லும் ரதம்.

பழைய வண்டி என்று கேலி செய்தாலும்
இதன் பின்னேயிருக்கும்
இழையோடிய இதமான அன்பை
யாரறிவார்?

தலைக்கவசம் அணியவில்லையென்றால்
ஊடல் கொண்டு ஓரிடத்தில் நின்று விடும்.
எனைக்காப்பதில் அதீத அக்கறை.

வாகனங்களை முந்திக் கொண்டு
செல்லலாமென்று முறுக்கிப் பிடித்தாலும்
கிறுக்குப் பிடித்ததைப்போல
மெதுவாகவே செல்லும்.



நேரத்திற்கு அழைத்து வரும் தேர்.
எந்த வாகனமும் இதற்கில்லை நேர்.

எனைக் குறிக்கும்' Tr' ஸ்டிக்கரை நெற்றியில்
ஒட்டிக் கொண்டு வலம் வருவது அதற்கு
யானையின் மத்தகத்தை அழகுசெய்தது போல
மகிழ்ச்சி.

பயணத்தை களிப்பாக்கி பாதையிலே
சீராகச்செல்ல உதவும் என் வாகனத்தை
உயிர்வகையிலே
ஓரறிவுடன் சேர்க்கச்சொல்லி
போராடிய இருப்பேன் உயிரோடிருந்தால்
உயிர்வகை உரைத்த தொல்காப்பியரிடம்.

இன்று என் வாகன தினம்

கவிஞர் விஜயலட்சுமி காளிதாசன்,கோவை மாவட்டம்

# இரவு!

இரவு என்பது சில பேருக்கு
அயர்ந்து தூங்கும் நித்திரை மேடை
இன்னும் சிலருக்கு
இரவு இயற்கையை ரசிக்கும் ரசனை மேடை

இன்னும் சிலருக்கு
தனிமையை போக்கும் துணை மேடை
இன்னும் சிலருக்கு
தன் முகமூடிகளை களையும் ரகசிய மேடை

இன்னும் சிலருக்கு
புது வேஷங்களை அணியும் நாடக மேடை
இன்னும் சிலருக்கு
மறைமுக உதவிகள் புரியும் உன்னத மேடை

இன்னும் சிலருக்கு
அறிவை தேடும் ஞான மேடை
இன்னும் சிலருக்கு
தன் உணர்வுகளை களையெடுக்கும் தியாக மேடை



இன்னும் சிலருக்கு
தன் முகவரி தேடும் பயண மேடை
இன்னும் சிலருக்கு
தன் வாழ்வை ஆரம்பிக்கும் முதல் மேடை

இன்னும் சிலருக்கு
உலகை பிரியும் மரண மேடை
இரவு யாவருக்கும் ஒரே மாதிரி அல்ல

இரவு ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு மேடையாகிறது

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# கால் விலங்கு கல்லாமை

இருள் மேகத்தில் நிலவு இல்லையேன்
பூமியே இயங்கிட படும் கஷ்டம்
சூரியனே அற்றுப் போனால் வீணாகிடும்
பாரில் உள்ள உயிர்கள் அனைத்தும்
வறண்ட பூமியில் பயனேது மனிதா
பயனுடை நீரைத் தராபாழடைந்த கிணறு
பாதுகாப்பு நல்கா பாழடைந்த மாளிகை
கால் விலங்கிட்ட கல்லா மனிதனுக்கு இணை
சென்ற இடமெல்லாம் சிறப்புற அறிவே ஒளி
பரம்பரை வாழ வாழ்க்கை வளமாக
பாரில் மேன்மை பெற
பதவிகள் பெற்று ஆளுமை செலுத்த
கற்கும் காலத்தை பொன்னாய் மதித்து
குறைவில்லா நிறைமதி தேடு
வாழ்வின் பயன் வாசித்தல்
வாசித்தல் பயன் அறிவு மேன்மை
அறிவு மேன்மையே
கால்விலங்கில்லா களி வாழ்க்கை தரும்




கவிஞர் ஜஸீரா ஜலீல்

# தனிமையின் குதூகலத்தில்

வெற்றுத் தனிமையில் நானிருக்க.
அந்த வெண்ணிலாவை பார்த்திருக்க.
விண்மீனை தேடுதந்த மேகம்.
என்மேல் கொண்டதொரு கோபம்.

தாமரைக்குள் தவளைக் கூட்டம்
காரணம் இன்றியே கத்துகிறதே.
ஏனென்று யாதொன்றும் நானறியேன்.
ஓரிமை மூடியே கண்ணசைத்தேன்.

கடந்துபோன கார்முகிலை எடுத்தல்லோ.
தன்முகம் மறைத்தது வெண்ணிலா.
கடலலையின் ஓசையை கடன்வாங்கியே.
கருமேகம் காணம்நூறு பாடிவருது.



ஊசிபோன்ற மழைத்துளிகள் கவிதை.
நூறு அள்ளித் தருது.
உண்மையிலோ நானிருந்தேன் குடையின்றி.
தனிமையின் குதூகலத்தில் மனமிறங்கி.

கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# ஜன்னலுக்கு வெளியே

கூண்டுக்குள் அடைபட்ட
பறவை போல்
வீட்டுக்குள் சிறைபட்டுக்
கிடக்கும் பாவையவள்.
ஜன்னலுக்கு வெளியே
ஏக்கப்பார்வை ஒன்றை வீசுகிறாள்.
என்றாவது நமக்கு சுதந்திரம்
கிடைக்காதா? என்ற
எண்ணத்துடன்.



கவிஞர் அகல் தாமரை "கவி", கமுதி

# விழித்திடு மானிடா

இலவசம் என்று பொருட்களும் கிடைக்குதுங்க
இதை நம்பினோர் ஏமாறுவதும் உறுதியுங்க
இலவசத்துடன் இன்ன பிற பொருட்களையும்
கட்டாயப் படுத்துவது நமக்குத் தெரியலைங்க
முறையான தேதியும் தெளிவா தெரியலீங்க
காலாவதி தேதியும் மறைஞ்சுதான் கிடக்குதுங்க
விற்பனை அங்காடியில் முறையா வைக்கலீங்க
விழறாங்க மக்களும் விலைகுறைவு பெயராலே
தரமுள்ள அங்காடிகள் பலவும் இருக்குதுங்க
ஆனாலும் அதை மறைக்க நாடகமும் நடக்குதுங்க
வாடிக்கையாளர் நலன் முக்கியம்னு சொல்றாங்க
வேண்டாத வஸ்துக்களை விற்பனையும் பண்றாங்க
போதை மருந்துகளும் கலப்படம் ஆகுதுங்க
பிஞ்சுகளும் போதைக்கிங்கே அடிமை ஆகுதுங்க
கலப்படப் பொருளாலே உடலுமிங்கே கெடுதுங்க
காசு கொடுத்து வியாதியும் வருகுதுங்க
நுகர்வோருக்கு அடிப்படைச் சட்டமது புரியவைத்து
நுகர்வோர் உரிமை நலம் மீட்போமுங்க
வியாபாரத் தந்திரத்தில் நம்மைப் புகுத்துவோரிடம்
விழித்திட வேண்டும் நாமும் தாங்க



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# காத்திருக்கின்றாள்

இன்னும் ஒரு நாள் இருந்து விட்டு போகலாமே போ
என்று கேட்ட தாயிடம்
அடுத்த நாள் காலையில் வேலையில் இருக்கனும் என்று
மௌனமாய் சொல்லி விட்டு நகர்கிறான்.

நடந்து செல்லும் பாதையில் வலுவிழந்த மனதில்
வழி தெரியாமல் ஓடுகிறது
கண்ணீர் துளிகள்.

திரும்பி வரப் போகும் நாட்களை
நாவசைக்காமல் மன கணக்காய் போட்டு வைக்கிறான்.

அங்கே!
இன்னும் ஒவ்வொரு பண்டிகை நாளுக்கும்
படையல் செய்து காத்திருக்கின்றாள்.



கவிஞர் ரமேஷ்யோகி & கு.ரமேஷ்குமார்,மதுரை

# நேரம்

ஒவ்வொருவரின் கையிலும் ஓர் கைக்கடிகாரம்
நேரத்தை மட்டும் இழுத்துகட்ட இயலுவதில்லை

முட்களை பார்க்கும் பொழுதெல்லாம்
முன்செல்பவரும்
பின்செல்பவரும் தவறாமல்
தொக்கிக் கொள்கின்றனர்
வரிசையில்.

நான் யாரிடமும் நேரத்தை கேட்க விரும்புவதில்லை
எனது நேரத்தை பத்திரப்படுத்திக் கொள்வதில் மட்டுமே
நான் முழுமூச்சாய் இறங்கி செலகிறேன்

இன்றைய நொடிகளை
அடுத்த நிமிடத்திற்கும்
இடையில் மிஞ்சிய நிமிடங்களை
அடுத்த மணிக்கும்
கடத்தி நகர்கையில்
தானாய் புரள்கிறது
நாட்களை உண்டதோர் வருடங்கள்.




கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# இரவலாய் இன்னோர் இதயம் வேண்டும்

இதயம் ஓர் இரகசிய அறை
அதில் சுலபமாக யாராலும்
நுழைந்துவிட முடிவதுமில்லை
எல்லோருக்கும் எளிதில்
அதன் சாவி கிடைத்து விடுவதுமில்லை

அங்குதான் சொல்ல நினைக்கும் சோகங்களும்
சொல்ல முடியா துரோகங்களும்
கண்ணீர் விட்டு விம்மி அழுகின்றன.

வலிகளை தாங்கிக் கொண்டு கலங்கிய விழிகளோடு
வலிகளுக்குள் வழிகளை
தேடிக் கொண்டிருக்கும் மங்கை இவள்

என் மனமோ வலிகளையும் வாழ்க்கை பாதையின்
குழப்பங்களையும் சுமந்திட
நானோ விடியலை தேடி அலைக்கின்றேன்
மரத்தடியில் உதிர்ந்த மலரை
மிதித்தவரின் பாதச்சுவடு யாரறிவார்
மழைநீரோடு கரைந்து போன
என் கண்ணீரின் சுவை யாரறிவார்



காரணமின்றி என்னுள் காயங்கள் பல
காரணமானவர்களை தேடவா அல்லது
காயங்களுக்கு மருந்திட வழிகளை தேடவா

இரவலாய் எனக்கோர் ஓர் இதயம் வேண்டும்
நொடிப்பொழுதேனும் வலியற்று வாழ்ந்திட

கவிஞர் சாஜிதா ஜெளபர்,இலங்கை

# காதல்

கரையான் கட்டும்
புற்று அல்ல!
களங்கம் இல்லா
உள்ளம் எழுப்பும்
கலைக்கூடம்!

அலை அடித்து
ஓயும் கடல்!
ஓயாமல் இயங்கும்
காதல்!
விழி வழி பேசி
நெஞ்சம் தைக்கும்!



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# ஒற்றுமையே வல்லமையாம்

ஒற்றுமை கொண்டால் என்றும் நலம்
வேற்றுமை கண்டால் இல்லை பலம்
வண்ணம் வேறுபட்டாலும் எண்ணம் ஒன்றே
பூக்களின் பலவண்ணம் மாலைக்கு அழகூட்டும்
அன்பை விதைத்து ஆற்றுதல் படுத்துவோம்
இன்பம் பெருகவே ஈதல் செய்திடுவோம்
உதவும் எண்ணம் என்றும் கொண்டிடுவோம்
ஊக்கம் மிகுதியால் ஆக்கம் படைத்திடுவோம்
எங்கும் நல்ல விதை தூவிடுவோம்
ஏற்றத்தாழ்வு நீங்கவே சமதர்மம் காப்போம்
ஐவிரல் தன்னில் வேறுபாடு இருப்பினும்
ஒருகரம் ஆகியே பணிகளை முடிக்கும்
ஓங்குபுகழ் பெறவே ஒற்றுமையாய் உழைப்போம்
ஔவை மொழியைப் பின்பற்றி நடப்போம்
சாதி மத பேதம் பாராமல்
ஒற்றுமை வேதத்தை நாளும் ஓதுவோம்.



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# வாடாத மல்லியே!

தனிமை தாலாட்டில்
தென்னை கைவீசிடும்
பிச்சிப் பூவின் மணம்
பிரிவை கேள்வி கேட்குது

சூழும் இருளும்
மூழ்காத பகலோடு
உரசித் திரியுது
ஆலயத்தின் மணிக்கூண்டு
நேரத்தை ராகமிசைத்தது



இரவு உணவின்
தாளிப்பு வாசனை
கவிழ்ந்த இருளழகில்
மெய்மறந்த நீலவன்

விசும்பிய மேகத்தெளிப்பும்
பொன்வானம் கவிதையும்
அசையாத மரங்கள்
பேரமைதியில் ஏதோ ஒரு சேதி
முடிக்காத கருங்கூந்தலில்
தங்க அரளியின் பளபளப்பு
மின்னலின் சங்கீதம்.

கண்ணில் சிக்கிய
இரு தாரகைகள்
இதோ அருகிலே நானென
மழையின் முகவரி
தன்னிடம் சேரும்
பறவைக் கூட்டங்கள்
இயற்கை வெளிச்சம் விலகியது

செயற்கை ஒளிகள்
கூடியது கூட்டமாய்
சிரிப்பை மறந்த கண்கள்
தொலைந்து போகுது
நீட்டிக்கும் நாடகப்பேரவைக்குள்
நாளை தொடரும் மணம் வீசும்
ஊர்வலம் வரும் என
வாசகங்கள் வடிவங்கள்

நெஞ்சில் நிறைந்த ராகங்கள்
காணாமல் போனது
தேவாரமும் காதில் விழுந்தது
தில்லை வாழ் அம்பலத்து
அடியார்க்கு அடியேன்
என் மனமும் கையும் திசைமாறியது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# அம்மா

கனம் தாங்கி என்னை கருவில் ஏந்தினாய்
மரண வலியை கூட
சில மணித்துளியில் அனுபவித்தாய்
உன் உதிரம் கொண்டு எனக்கு உணவழித்தாய்
சத்தமிட்டு நான் அழும்போதெல்லாம்
முத்தமிட்டு என்னை அணைத்தாய்
எனக்கு உயிர் கொடுத்த அன்னையே
பத்துத் திங்கள் உறக்கம் கலைத்து
எனக்காக கண்விழித்தாயே
தூக்கத்தில் கூட தூங்காமல்
எனையே நினைத்திருப்பாயே
நான் உனக்கு கொடுத்த
வலிகளோ அதிகம் அம்மா
அத்தனையும் எனக்காக பொறுத்தாயே
சோர்ந்து விழும்போதெல்லாம்
என்னோடு சேர்ந்து நின்றாய்
பொறுமையின் சிகரம்
யாரென்று என்னைக் கேட்டால்
தயங்காமல் கூறுவேன்
அது என் தாயன்றி வேறில்லை என்று
நீ இன்றி இன்று நான் இல்லை
அத்தனையும் அழகாய் ஆக்கிவிட்டு
இன்று மட்டும் என்னை தனியாய் விட்டு
சென்றதன் காரணம்தான் என்னவோ
என் தாயே!




கவிஞர் ஜெளபர் பாத்திமா றிபானா,இலங்கை

# அன்றொரு நாள் நிலவு

நினைவுகளில்
நிலைக்கவில்லை

கடைக்கண்ணில்
கடந்துவிடவும் இல்லை

காற்றில் மிதந்தபடி
கனவுகளில் தங்கிவிடவும் இல்லை

ஒத்திகை பார்த்தும்
உரையாடலின் சுவாரஸ்யம்
கூடிவிடுவதில்லை

விட்டுவிட்டு யோசித்து
பிழை திருத்தும் உணர்வில்
பிதற்றிடவும் இல்லை

கைமீறிப் போனதாய்
கடிந்திடவும் இல்லை

வாதிடும் மௌனத்தில்
கரைந்திடவும் இல்லை

களவாடிப் போனதாய்
சுழிப்பதும் இல்லை

காவிரிப் படுகைவழி
மணல்திட்டு மனதில்




அன்றொரு நாட்களாகி
அமிழ்ந்திடவும் இல்லை

அரிப்பது அறியாது
இலைக்குள் பசியாறும்
சிற்றுயிர் உணர்வில்

வாழ்தலின் பொருட்டு
வலிந்து நகராது
வழியில் மகரந்தம்வீசும்
மலர்ச்சோலைக்குள்
இன்றும் நகர்ந்தது

அன்றொரு நாள்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# மாலவனும் வைணவமும் - பகுதி 8

பேய்போலும் ஆற்றல்மிகு ஆன்மாவால் உடலில்லாத்
தன்மையால் பேயாழ்வார் என்றானார்! பிறவிக்கடல்
நீந்தியவர் இறைவனடி ஆழ்ந்திட்ட வைணவரே!
அருளதனை ஈட்டிட்டார் ! இறையுடைமை நண்ணிடவே
பேயாற்றல் உற்றவரே! பேயெனவே அலைந்தவரே!
பெம்மையெனும் பெருமையதே ஆழ்வாரெனல் இணைவாலே
பேயாழ்வார் ஆனதுவே! திருமயிலை நற்றலத்தே
ஐப்பசியின் சதயத்தே அல்லிமலரில் அவதாரம்!
மூன்றாவது அந்தாதி படைத்திட்டார்! ஒருநூறு
பாசுரங்கள் உற்றதுவே! மிகப்பெரிதாம் மாண்பெருமை
உற்றிட்டார் எனும்பொருளில் மகதாத்வயர் என்றபெயர்
சமஸ்க்ருதத்தில் உற்றவரே! முதல்நின்ற பாசுரத்தே
திருக்கண்டேன் பொன்மேனி கண்டேனென திகழருட்கண்
அணிநிறமும் கண்டதுவாய் செருக்கிளரும் பொன்னாழி
கண்டதுவாய் புரிசங்கம் கைக்கண்ட திருவுருவம்
கண்டதனை நயம்மிகவே விரித்திட்டார்! இத்திறத்து
பேயாழ்வார் பொன்னடிகள் சரண்புக்கு ஓங்குவமே!



கவிஞர் கனக்காயன் (இ.சே.இராமன்)

# தீப ஒளி திருநாள்

தீபங்களின் ஒளி வரிசையே தீபாவளி தானே!
ஆயிரம் எண்ணங்களை கலைந்து
ஒளிமிகு தீபாவளியை வரவேற்போமே!
இருள் உள்ள இடத்தில் ஒளி வெள்ளத்தை ஏற்றுவோமே!
நரகாசுரன் கதை நமக்கும் ஒரு பாடம் தானே!
வரம் தந்தவன் தலைமேல் கை வைக்க வந்ததுதானே!
தீமைகளை களையத்தானே பட்டாசு வெடிக்கிறோம்.
தீபத் திருநாளில் பிரம்ம முகூர்த்தத்தில்
நல்லெண்ணெய் குளியல் போட்டு கங்கா ஸ்நானம்.
நல்லெண்ணையில் ஒரு ஐதீகம், நல்லெண்ணையில்
மகாலட்சுமி வாசம் செய்வதாக சொல்லப்படுகிறது.

புது துணி போட்டும்,பட்டாசு வெடித்தும்,
இனிப்புகளை உண்டும், புத்துணர்ச்சியும் , பெறுகிறோமே!
பெரியோரும் சிறியோரும் ஒன்றாய் கூடி மகிழ்கிறோம்.
நாம் மட்டும் மகிழ்ந்தால் போதுமா?
ஊனமுற்றோரும் ,முதியோர், நலிவடைந்தோர்
அனைவருக்கும் நல்வழி காட்டுவோமே!
தீபத்திருநாளில் மகாலட்சுமியும் கங்கையும்
ஒவ்வொரு வீட்டிற்கும் வருவதாக ஐதீகம்.
இந்த சுகங்களை தந்த ஆண்டவனுக்கும்
நன்றிகளை சமர்ப்பிப்போம்.
ஒவ்வொரு உயிர் களிலும் திறமையும் அன்பும் உள்ளது.
துன்பங்களை ஒதுக்கி வைப்போம்.
யாருக்குத்தான் பிரச்சனை இல்லை ?
எப்போதும் மகிழ்வுடன் இருப்போம் என்று
இத்திருநாளில் சபதம் ஏற்போமே.
இத்திருநாளில் அனைவரும் ஒன்று கூடி மகிழ்வோமே!




கவிஞர் ஆ கிருஷ்ணவேணி,ஊத்தங்கரை

# எட்டா உயரமென

வழியும் வியர்வையைத் துடைத்தபடி
நகரும் சக்கரத்தின் கீழே
நிமிராத குனியும் முதுகைச் சுமந்தபடி
தெருவெங்கும் முழங்கும் கூச்சலில்
நடுங்கும் பிளிரலில்
மிரளாத விழிகளில் கண்ணுற்றபடி
உருளும் நகர்வை நேராக்கிட
தேர்முட்டிகளை சுமந்தபடி
சக்கர உலகத்தின் கடவுளின் சேவகர்கள்
கடைசிவரை நிமிர்ந்து பார்ப்பதில்லை
வானத்தை முட்டும் தேரின் உயரப்பந்தலையும்
வீதிகளை இணைக்கும்
வடச்சங்கிலிகளின் நீளத்தையும்.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# முத்தங்கள்

முத்தங்கள் அபத்தமில்லை
அது நாகரிகத்திற்கு
அப்பாற்பட்டது.
ஆறுகள் தண்டிக்கப்படாது
பதினாறுகள் தண்டிப்பதை
வயதுகள் பெற்றுதந்ததோ.



இன்றெல்லாம்
தூக்கி ஏறிதலில்
நாகரிகமாகிப்போனது
மூடிய வீட்டுக்குள்
எறியும் செய்தித்தாள்
கடிதங்கள் போல்
முத்தங்களும்.

வசதிகள் தெரிவதில்லை
ஆடம்பரம் விரும்புவதில்லை
எந்த இடத்துப் பூவுக்கும்
நீர் தெளிக்கும்
பொது நோக்குகள்
இவற்றிடம் உண்டு.

நெற்றி,கன்னம்
உதடு,கண், மூக்கு ,கை என
ஒவ்வொன்றிற்கும்
கேட்டு வாங்கும்
குழந்தை மனம் போல் சுத்தமானது
அது காதலர் நிலைபோல் ஆபத்தானது.

குற்றச்சாட்டுகள்
நிறைந்திருந்தும்
தீர்மானமாகுகிற
உச்சநீதி மன்ற
தீர்ப்புகள் போல்
முத்தங்கள்.

முத்தங்களில் உறவுண்டு
முத்தத்தாலே உறவுருவாவதுமுண்டு.

கவிஞர் கோ.டோன்குமார்,திருவலம்

# பிடித்து நிறுத்தா நேரம்

அடர்வனத்தில்
அடர்இருள்
போக்கிடும்
ஒளி நிறைத்து
நீயும் நானும்

யாருமற்ற தோப்பின்
தவிக்கும் அமைதி போக்கும்
இரு குயில்களாக
நீயும் நானும்



சிறு ஓடை
சலசலக்கும் நதி
நிறைய காதல்
கொஞ்சூண்டு காமம்
முற்றும் துறந்து நீந்தும்
மீன்களாக
நீயும் நானும்.

பிடித்தமான மடி
பிடித்து நிறுத்தா நேரம்
செல்லக் கொஞ்சல்கள்
செல்லமாக சீண்டல்கள்
பிடித்த  நீயும் நானும்
தோள் சாய்ந்து கனவில்.

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை

# இயந்திரமாய்

உலகில் மனிதன் இயந்திரமாய்
சுழல்கிறான்!



அக்கம் பக்கம்
அறியாமல்
சுற்றத்தார்
தெரியாமல் சுழல்கிறான்!

பணத்தைத் தேடி
குணத்தை மறந்து
பிணத்தை போல
சுழல்கிறான்!

கணிப்பொறி
அலைகள் போல்
பறக்கிறான்!

மெட்ரோ இரயில் போல
வேகம் - அவனிடத்தில்

பெண்கள் நிலை
இவ்வுலகில்
சுழற்றி அடிக்கப்படுகிறது

சடங்கு-வரதட்சனை கொடுமை
பிரசவம்
குழந்தை பராமரிப்பு
குடும்ப பராமரிப்பு
சுற்றத்தார் நலன்
மாமியார் கொடுமை
குடிகார கணவன்
என்னே!
பெண்ணின் நிலை
இயந்திரமாய் சுழல்கிறது!

கவிஞர் முனைவர்.சி.சுகந்திர வனிதா,உச்சிப்புளி

# நண்பன்

பேசுவது அவர்கள் உரிமை
கேட்பது உன்னுடைய கடமை
என்றாலும் ,
அதை காதில் வாங்குவதா
அல்லது
காது கேளாதவர் போல் "இருப்பதா "
என்பதை
அலசி ஆராய்ந்து
முடிவு
செய்யும் அதிகாரம் !
உன்னிடத்தில் உள்ளது.
என்பதை புரிந்து கொண்டு
சிறிது சிந்தித்து
நீ முடிவு செய்.
அந்த அதிகாரம்
கடவுள் உனக்கு மட்டுமே கொடுத்திருக்கிறார்.



இதை உணர்ந்து
மனதார கடவுளுக்கு
நன்றி சொல்!
அதை மூளையில்
கொண்டு செல்லும் போது
உன் மனதுக்கு
மகிழ்ச்சி தருமானால்
மனதுக்கு மருந்தாகும் என்று நினைத்தால் மட்டும்
மனதில் வை இல்லை யென்றால்
மறந்துவிடு
மறப்பதற்கு உன் நண்பனாக இருக்கும்.
கடவுளிடம் உதவி கேள்!

கவிஞர் ஜெ.தேவி ராஜசேகர்,சென்னை

# கடைக்கோடியில்

கலங்குதே கண்ணே கடை கோடியில் ஏழைகளின் திரட்டு
ஒப்பனை இல்லா கற்பனைகள் தினம் ஓர் கண்ணீர்
அமிர்தம் இல்லா ஆக்கத்தில் ஆங்காங்கே குற்றம்
உழைப்பவன் ஆண்டியாகவும் சுரண்டுபவன் நீதியாகவும்
நிலைகுலைந்த வாழ்க்கையில் மனிதன் தீட்டிய பணம்
பிரித்து வைத்ததே மனித மனம் தினம்
தீராத நிபதனைக்கு தீர்வு ஒன்றென்று
பாகுபட்டு பார்க்குதே பணக்காரன் கூட்டு
ஒருவேளை அண்ணம் இன்றி அனாதையாக
பல கோடியில் பலரும் தெருக்கோடியில்
எட்டுத்திக்கும் நிலவுதே கண்ணீர் குழம்போல்
கடைக்கோடி கண்மாயில்
யாரால் தீட்டப்பட்ட வினை எங்கிருந்து பிறந்த வினை
மனிதனின் தீராத மோக வினை
பிறப்பிலும் இறப்பிலும் இல்லையே
ஏட்டுக்கும் நோட்டுக்கும் மாரடிக்கும் கூட்டம் ஒன்று
அரசியல் களத்தில் ஆங்காங்கே பிரச்சாரம்
நீருக்கும் சோறுக்கும் ஒரு வேளை உடன்பாட்டு
உலகில் உழைக்கும் வர்க்கம்
உழைத்துக் கொண்டே தான் இருக்கிறது
முன்னேற்றம் இல்லாமல்
இதை எதிர்க்கும் நிபந்தனை கடைக்கோடியில் பிறக்கிறது
ஆனால் நீதி எங்கே செல்கிறது
கடை கோடி கண்ணீரில் பல காவியங்கள் உண்டு



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# பனி முத்துகள்

தொடங்கிவிட்ட பருவகால மழையென
மெல்ல பொழிந்து கொண்டிருந்த
பனிமுத்துகளின் கணத்தை தாங்காது இலைகளை
உதிர்த்துகொண்டிருந்தன மரங்கள்.
சிருதுண்டு இளவம்பஞ்சும்
தென்னநாறும் வாயில் கவ்விக்கொண்டு
கூடுகட்ட. இடம் தேடிகொண்டிருந்த
முற்றத்து அணில்
இடம் கிடைத்த பூரிப்பில்
வீட்டின் சுவர் மீதேறி
தன் இணையை அழைத்து அலுத்துப்போனது.
சிறுமிடறு தண்ணீர் பருகிசெல்ல
தவந்தான் கிடந்தன அந்த
கிண்ணமும் இந்த மனமும்.
இதுபோலொரு வாழ்வு போதுமென்று
அணில் பிள்ளையாய்
மனம் இறைஞ்சி கொண்டிருந்தது
இயற்கையிடம்.



கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# தீபாவளி சூறாவளி

வயது முதிர்வின் காரணமாக
அறுவை சிகிச்சை செய்துக் கொண்ட அப்பாவை
உடன் இருந்து டிஸ்சார்ஜ் செய்வதற்கு கூட
விடுமுறை கிடைப்பதில்லை

அடிக்கடி ஒற்றைத் தலைவலி வரும் மனைவிக்கு இன்னும்
மருத்துவம் பார்த்த பாடு இல்லை
உடன் பணிபுரியும் சூப்பர்வைசருக்கு
ஒரு நாள்
விடுப்புச் சேர்த்துக் கொடுக்க முடியவில்லை

குழந்தைக்கு இன்னும்
மழை இல்லாத நேரம் பார்த்து
பட்டாசு வாங்கி கொடுக்க முடியவில்லை,

சம்பள நாளுக்கு ஒரு நாள் முன்னால்
உயர் அதிகாரியின்
கெட்ட வார்த்தை பேச்சுகளை
காதுகள் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை

குடும்பத்தோடு சொந்த ஊருக்குச் சென்று
தீபாவளி கொண்டாட வழியில்லை

அம்மாவின் நினைவு நாள் வந்தால் கூட
நினைவிடம் சென்று
அவர்களுக்கு ஒரு கண்ணீர் பூக்கள்
வாங்கி வைக்க முடியவில்லை



இத்தனை இடர்களுக்கு மத்தியில்
வங்கிக் கணக்கில்
வந்துச் சேர்ந்த போனஸ்க்கான குறுஞ்செய்தி
அவ்வளவு ஒன்றும் இனிப்பாக இல்லை

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# வேசம் கொண்டவருக்கு பாசம் தெரிவதில்லை

தக்க வைத்து கொள்ள தக்க காரணமே எதற்கு
பாசமென்ற ஆயுதமே தாக்க வில்லை எனும்போது
நெஞ்சத்தை தட்டி உள்ளே சென்றவர்கள்
இடம் போத வில்லை என்றா எட்டி விட்டு செல்கினர்

பாசத்தில் என்ன பிழை கண்டனரோ
பாதளத்தை பார்த்து விட தான் நெய்கினரோ
வேசம் கலைந்ததும் நேசம் விட்டு போகிறதே
பார்த்து பார்த்து பழக தான் வேண்டுமா
பலாப் பழமா சக்கரமிட்டு பார்த்து தெரிவு செய்ய

மனிதம் வெளித்தோற்றத்தில் நலவான வேலியை
போட்டு கொண்டல்லவா நாடகம் ஆடுகிறது
யாரென்று அறிவதிலே நேரம் கொடுத்தவர்கள் தானே
யாரென்று தெரியாததை போல பேசி விடுவது
தேர்தல் முடிந்ததும் கொடுத்த வாக்கை மறந்தவர்களை போல
தேடல் தீர்ந்ததும் தேவை அற்றவராக நாமாகிறோம்
எவ்வாறு தான் இவ்வாறு தான் இருக்க முடிகிறதோ அவர்களுக்கு
நாம் தான் நினைவோடு கரைந்து மறைகிறோம்
நனவைத் தொலைத்தும் சுற்றம் மறந்தும்
நாமாகி போக நீ யாராகிறாய்
எனக்கு என்ற கேள்வியை தொடுத்து விடைக் கொடுக்கிறார்கள்
விட்டு சென்றவருக்கு நாம் புழுதியை போல
இருந்ததாலே தான் தட்டி விட்டு சென்றார்கள்
அவர்கள் எமக்கு தூசியை போல
இருந்ததாலே தான் உறுத்தி கொண்டிருக்கிறார்கள்
கண்ணில் விழும் தூசியை அகற்ற நீரை தேடுவதை போல
சோகம் தீர முடிந்த மட்டும் அழுது விட்டு



உதறி தள்ளி எம்மை புதுபிக்க
விருப்ப தேர்வுகளோடு ஒன்றி விடலாம்
காலம் என்ற ஆயுதம் எம்மை மாற்றி விடும்
எல்லாம் மாறி விடும் என்று நம்பிடுவோம்
எம்மில் பிழை இல்லாத போது
வருத்தப்பட்டு வருத்துவதை நிறுத்தி விடுவோம்

கவிஞர் சஹ்னாஸ் பேகம்,இலங்கை

# கவலைதரும் காற்றுமாசும் காலநிலை மாற்றமும்!

கடந்தவாரச் செய்திகளில் காற்றுமாசு தில்லியிலே
இடம்பிடித்ததை நாமறிவோம்!கவலைதரும் நிகழ்விதுவாம்!
பஞ்சாப், ஹரியாணா, உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான்
மாநிலங்கள் தம்மில் அறுவடை முடிந்த
வயல்களில் தீவைக்க, புகைசூழ்ந்தது தலைநகரில்!
காற்றிந்தரம் குறைந்து மூச்சுவிடவே திணறும்நிலை!
காற்றுமாசு மட்டுமின்றி புவிவெப்பம் மிகுதல்
மற்றுமொரு அச்சுறுத்தல் மனிதகுலம் வாழ்வதற்கே!
ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கும் வெப்பநிலை!
தூண்டப்படும் காலநிலை மாற்றமிதன் காரணமாம்!
கரிம எரிபொருள் பயன்பாடு மிகுவதனால்
கரியமில வாயுவின் அளவு அதிகரிப்பு!
மாறிவரும் பருவமழை, தீவிரமான புயல்கள்,
பெருகிவரும் வெள்ளங்கள், பெரும் வறட்சி,
கடலரிப்பு இவையாவும் காலநிலை மாற்றத்தால்!
கடற்கழிப் பகுதிகள் கழிவுத் தொட்டிகளாய்!
தொடரும் போர்களினால் பேரழிவு விளைகிறதே!
பெருந்தொழில் வேளாண்மையில் பூச்சிக்கொல்லி மருந்துகள்
பெருமளவில்! அருகிடும் பூச்சியினங்கள்! தேனீக்கள்
அழிந்தால், இவ்வுலகில் வாழாது மனிதகுலம்!
மனிதகுலம் மட்டுமின்றி பிறஉயிர்கள் அருகிடுமே!
கட்டுக்குள் அடங்காத காட்டுத்தீ, வெப்பஅலை
நாடுகள் பலவற்றில் ஆண்டுதோறும் தொடர்கிறதே!
காடுகளின் அழிவு! கடல்மட்ட உயர்வு!
புலிகளின் அழிவால் கார்பனளவு அதிகரிப்பு!
ஒலிமாசு மிகுவதனால் உளவியல் சிக்கல்கள்!
மலட்டுத்தன்மைமிகுவதால் பறவையினம் அருகுதல்!
ஒலியின் துணையால் தடமறிதலில் தடுமாற்றம்!
காற்று, நீர்,நிலம் மாசடைதல் தவிர்த்திடுவோம்!
காத்திடுவோம் இப்புவியை கவலையின்றி வாழ்ந்திடவே!



**கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி**

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம் -10** **ஏதாவது பிரச்சினையா?**



பெருமூச்சு விட்ட சிவா, சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட் எடுத்து பற்ற வைத்துக் கொண்டு கதவைத் திறந்து மேலேறி மொட்டை மாடியில் நின்று புகையை இழுத்து காற்றில் ஊதினான்.

மனதிற்குள் புன்னகை எழுந்தது. 'திவ்யாவை எப்படி வளர்க்கப் போகிறோம்' என்று தேவகி இறந்த போது திக்கித் திணறி நின்ற நேரத்தில் கூட புவனாவை திருமணம் செய்யப் போகிறோம் அவள்தான் திவ்யாவை வளர்க்கப் போகிறாள் என்பது தெரியவில்லை. என்னுடைய வாழ்க்கையில் என்ன வெல்லாமோ நடந்து விட்டது.' என்று எண்ணிக் கொண்டு திரும்பவும் புகையை இழுத்து விட்டான்.

கீழே நண்பர்களோடு சீட்டு விளையாடிக் கொண்டிருந்த சிவாவின் தம்பி மொட்டை மாடியில் புகை கருவதைக் கவனித்தவன் "ஒரு ஆட்டம் போடுங்கப்பா நான் இப்ப வருகிறேன்" என்று சொல்லி விட்டு மாடிக்கு வந்தான்.

"அண்ணா எனக்கொரு சிகரெட் கொடுங்க" என்றான். சிவாவின் அருகில் வந்து, "எங்கிட்டயே சிகரெட் கேக்குற அளவுக்கு பெரியாளாகி வீட்டீர்கள் இல்லையா?" என்று பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டையும் தீப்பெட்டியையும் எடுத்து நீட்டினான்.

சிகரெட்டை வாங்கிக் கொண்ட பாலு "என்ன அண்ணா ஏதாவது பிரச்சினையா? நான் சின்னப்பையன் தான் எதுவும் கேட்கக் கூடாது தான். இருந்தாலும் இப்படி நீங்கள் மொட்டை மாடியில் வந்து சிகரெட் குடிப்பதைப் பார்க்கும் போது கொஞ்சம் வருத்தமாக இருந்தது" என்றான் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

அத்தியாயம் -10 ஏதாவது பிரச்சினையா?

"அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னடா வாடை அடிக்குது. கல்யாண பார்ட்டியா?; சரி சரி போய் சீட்டு விளையாடு கொஞ்சம் காற்று வாங்கத்தான் மொட்டை மாடிக்கு வந்தேன். வேற ஒன்றும் பிரச்சினை இல்லை"

"என்னிடம் சொல்ல விருப்பமில்லை என்றால் சொல்ல வேண்டாம்"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை பாலு. ஒன்றும் பிரச்சினை இல்லை. அங்கே சிகரெட் குடித்தால் அரை முழுவதும் புகையாகும் என்றுதான் மொட்டை மாடிக்கு...

"நான் போய் படுக்கிறேன். நீ போ" என்றான் சிவா.

சிகரெட்டை முடித்து விட்டு சிவா படுக்கையறைக்குள் நுழைந்த சப்தம் கேட்டு விழித்தெழுந்த புவனா "ஸாரிங்க திவ்யாவிற்கு கதை சொல்லிக் கொண்டிருந்தேனா களைப்பு வேறே உடம்பை அசத்தி விட்டது அயர்ந்து தூங்கி விட்டேன். ரொம்ப ஸாரி" என்று பதைப் பதைப்புடன் எழுந்தாள்.

"பரவாயில்லை புவனா தூங்கு" , "என் மேல் வருத்தமில்லையே"

"கண்டிப்பாக இல்லை, சேலையை சரியாக மூடிக்கொண்டு தூங்கு" என்று சொல்லி விட்டு தலையணையை எடுத்து வெறுந்தரையில் போட்டுக் கொண்டு படுத்துக் கொண்டான் சிவா.



...தொடரும்

இரஜகை நிலவன்

# இளங்கோவடிகள்

## கட்டுரை

"நெஞ்சை - அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ் நாடு" - என்று பாரதியார் சிலப்பதிகாரத்தின் பெருமையை உலகறியச் செய்கிறார்.



தமிழில் முதலில் தோன்றிய காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரத்தை இயற்றியவர் சேரன் செங்குட்டுவனின் சகோதரர் இளங்கோவடிகள். அரச பதவியை உதறிவிட்டு துறவறம் பூண்டு வாழ்ந்தவர் இளங்கோ அடிகள். இவர் கி. பி 2 ஆம் நூற்றாண்டில் பிறந்தவர் என்ற ஆதாரமாக செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயில் எடுத்து விழாக் கொண்டாடிய போது, இலங்கை மன்னன் கயவாகு உடனிருந்தான் என்பதை இளங்கோவடிகளே, "கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் நன்னாள் செய்த நாளினி வேள்வியும் (வரந்தரு காதை)" எனக் கூறியுள்ளார். கயவாகு மன்னனது ஆட்சி கி.பி.2-ஆம் நூற்றாண்டு என இலங்கை சரித்திரமாகிய மகாவம்சம் கூறுகிறது.

இளங்கோவடிகள் தன் பிறந்த காலத்திற்கு காரணம் கூறியவாறு இயற்றிய காப்பியத்திற்கும் காரணம் வைத்துள்ளார். சிலம்பு+ அதிகாரம்- சிலப்பதிகாரம் கதையில் வரும் திருப்ப நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிலம்பே (கண்ணகி. பாண்டிமாதேவி ஆகியோரின் கால் சிலம்புகள்) இக் காப்பியத்தில் சிலம்பு காரணமாக இருப்பதால் சிலப்பதிகாரம் எனப்பட்டது. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்களாக முத்தமிழ் காப்பியம் (இயல், இசை, நாடகம்) என்னும் முத்தமிழும் விரவிப் பெற்றதால், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் (பாடல்கள் இடையிடையே உரைநடையும் வருவதால்),

# இளங்கோவடிகள்

## கட்டுரை

இயல் இசை, நாடகப் பொருட் தொடர்நிலைச் செய்யுள் (இசை, நாடக வெண்பாக்கள் நிறைந்துவருவதால்), குடிமக்கள் காப்பியம் (சிலப்பதிகாரத் தலைவன் சாதாரண வணிகன் என்பதால்) என்றும் அழைப்பர்

மலைவளம் காணச் சென்ற சேரன் செங்குட்டுவனிடம் குன்றக் குறவர்கள் கூறிய கண்ணகி பற்றிய செய்தி, அதைத் தொடர்ந்து புலவர் சாத்தனார் கூறிய கண்ணகியின் வரலாறுகள் தான இம்முதல் காப்பியம் தோற்றக் காரணமாக அமைந்த நிகழ்ச்சி மூன்று நகரங்களின் கதை என்னும் பட்டம் சிலப்பதிகாரத்திற்கு உண்டு சிலப்பதிகாரத்தை புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது சிலப்பதிகாரத்தில் காதை (கதை தழுவிய செய்யுட் பகுதிக்கு காதை எனப் பெயர்) என்றும் 30 உட்பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன இம் முப்பது காதைகளில் புகார் காண்டத்தில் 10 காதைகளும், மதுரைக் காண்டத்தில் 13 காதைகளும் வஞ்சிக் காண்டத்தில் 7 காதைகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

இக்காப்பியத்தில் பதிகம் என்ற பகுதியில் சிலப்பதிகாரம் கூறும் செய்திகள், 1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். 2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், 3.ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதாகும்.



"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது' - என்று இளங்கோவடிகள் சாத்தனாரிடம் கூறினார். 'தாங்களே இக்காப்பியத்தை எழுதுங்கள்' என்று சாத்தனார் கூறவே, இளங்கோவடிகள் தானே இக்காப்பியத்தை எழுதினார்.

# இளங்கோவடிகள்

## கட்டுரை

நாட்டிய அரங்கின் அமைப்பு, திரை அமைப்பு, விளக்கு ஒளி அமைப்பு ஆகியவை பற்றிய செய்திகள் விரிவாக இக்காப்பியத்தில் கூறுயுள்ளனர். இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்ச மரபு, பரதசேனாதீபம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் என்ற ஐந்து நூல்கள் சிலப்பதிகாரத்தில் வரும் இசை நாடகப் பகுதிகளுக்கு விளக்கம் கூறுவதற்கு அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டிய நூல்களாகும்.

கணவனை இழந்துவிட்டுக் கண்ணீருடன் நெடுஞ்செழியன் அரசவைக்குச் செல்லும் கண்ணகியை வழக்குரைக்காதையில் காட்டுகிறார் அடிகள்

சோகச் சுமையுடன் மன்னர் முன் நின்ற கண்ணகியைப் பார்த்து, நீர்வார் கண்ணை, எம்முன் வந்தோய்! யாரையோ, நீ? மடக்கொடியோய்! - என்று வினவிய மன்னனுக்கு,

"தேரா மன்னா! செப்புவது உடையேன் எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப் புள்ளுறு புன்கண் தீர்த்தோன், அன்றியும், வாயில் கடைமணி நடுநா நடுங்க ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுட, தான்தன் அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன் பெரும் பெயர்ப்புகார் என்பதியே, - என்று "ஆராயாமல் நீதிக்கு புறம்பாகத் தீர்ப்பு வழங்கும் மன்னனே! நான் யார் என்றா கேட்கிறாய்? விண்ணுலகத்தவரே வியக்கும் வண்ணம் ஒரு புறாவுக்காகத் தன்னையே அர்ப்பணித்த 'சிபி' மன்னனும் அரண்மனை வாயிலின் ஆராய்ச்சி மணியை ஒலிக்கச் செய்த, தன் கன்றை இழந்த பசுவுக்காகத் தன் அரிய மகனைத் தேர்ச்சக்கரத்தால் கொன்று நீதியை வழங்கிய மன்னரும் ஆண்ட புகார் நகரத்திலிருந்து வந்துள்ளேன்" என்று கூறி நீதி வழுவாமல் மக்களை ஆளும் தன் புகார் நாட்டு மன்னர்களின் பெருமையைக் கூறிவிட்டு, நீதி கேட்க முனைகிறாள் கண்ணகி.

# இளங்கோவடிகள்

## கட்டுரை

உண்மையை உணர்ந்த மன்னன் நெடுஞ்செழியன், அதிர்ந்தான், துடித்தான், பதைபதைப்புடன்,

"பொன் செய் கொல்லன், தன் சொல்கேட்ட யானோ அரசன்... யானே கள்வன்; கெடுக என் ஆயுள்" - அநீதியின் மரணத்தில் வீழ்ந்தழிந்தான். நீதியைப் பிழைத்த அவன் உயிரைத் தேடி அவன் மனைவியின் உயிரும் பின் சென்றது.

"மக்களின் பாதுகாப்புக்கு மன்னன், மக்களின் வாழ்க்கையே மன்னனின் உயிர். மக்களுக்கு அநீதியை, இன்னலை விளைவிக்கும் அரசு. அழியும் நீதி மன்றங்களில் நீதி அழிந்தால், அநீதியான அரசு அழியும்..." என்ற உண்மைகளை உலகுக்கு எடுத்துரைக்கும் சிலப்பதிகாரக் காப்பியத்தைப் படைத்த, இளங்கோவடிகளை, தமிழினம் தமிழ் கூறும் நல்லுலகம், ஞாலம் உள்ளளவும் நன்றியை மறவாது நினைவில் கொள்ளும்.




நன்றி

temple.dinamalar.com/
தமிழ் வளர்த்த சான்றோர்கள்,டாக்டர் அறிவுச்சுடர்

அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
முடிந்த பிரச்சினைகளை
நினைத்து கவலை
அடைவதை நிறுத்தி விட்டு
வரும் காலத்தை துணிந்து
தன்னம்பிக்கையுடன்
எதிர்த்து நில்லுங்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

**என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,**

**அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை**
**அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.**


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com agaramuthalaa

aagaramuthala@gmail.com